121 அரசுப் பள்ளிக் கட்டடங்களை முதல்வர் திறந்து வைத்தார்

பள்ளிக் கல்வித்துறை சார்பில் 121 அரசுப் பள்ளி கட்டடங்கள், கிளை நூலகக் கட்டடம் மற்றும் ஆசிரியர் இல்லம் ஆகியவற்றை சென்னை, தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலிக் காட்சி வாயிலாக புதன்கிழமை திறந்து வைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி உள்ளிட்டோர்.

சென்னை, நவ.3: தமிழக அரசின் சார்பில் ரூ.169 கோடி மதிப்பில் கட்டப்பட்ட 121 அரசு பள்ளி கட்டடங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் புதன்கிழமை திறந்து வைத்தார்.

பள்ளிக் கல்வித் துறை சார்பில் நபார்டு திட்டம், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி திட்டம், எம்எல்ஏக்கள் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதி, மாவட்ட கனிமவள நிதி மற்றும் ஆசிரியர் நல திட்ட நிதி ஆகியவற்றின் மூலமாக ரூ.169 .11 கோடி மதிப்பீட்டில் 121 அரசு பள்ளிக் கட்டடங்கள், கிளை நூலகக் கட்டடம் மற்றும் ஆசிரியர் இல்லம் போன்றவை கட்டப்பட்டன.

இந்தக் கட்டடங்களை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலிக் காட்சி வாயிலாக முதல்வர் மு.க.ஸ்டாலின் புதன்கிழமை திறந்து வைத்தார்.

நபார்டு திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர், கடலூர், திண்டுக்கல், ஈரோடு, கள்ளக்குறிச்சி, நாகப்பட்டினம், புதுக்கோட்டை, ராமநாதபுரம், சேலம், திருவள்ளூர், திருவண்ணாமலை, திருச்சி, ராணிப்பேட்டை, வேலூர், விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள 65 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ரூ.114 கோடியே 88 லட்சத்து 52 ஆயிரம் மதிப்பீட்டில் வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகக் கட்டடங்கள், குடிநீர் வசதிகள், கழிவறைகள் மற்றும் சுற்றுச்சுவர்கள் கட்டப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்தகல்வித்திட்டத்தின் கீழ் அரியலூர், பெரம்பலூர், திருப்பூர், தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, மதுரை, திருவாரூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம், சேலம், திருவள்ளூர், திருவண்ணாமலை, திருச்சி, வேலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, நீலகிரி, கோயம்புத்தூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள 45 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் 9 உண்டு உறைவிடப் பள்ளிகளில் ரூ.49 கோடியே 24 லட்சத்து 56 ஆயிரம் மதிப்பீட்டில் வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகக் கட்டடங்கள், குடிநீர் வசதிகள், கழிவறைகள் மற்றும் சுற்றுச்சுவர்கள் கட்டப்பட்டுள்ளன.

சட்டப்பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியிலிருந்து சிவகங்கை மாவட்டம் செம்பனூர், மெய்யம்மை காசி அரசு மேல்நிலைப் பள்ளியில் ரூ. 80 லட்சம் மதிப்பீட்டில் 4 வகுப்பறை கொண்ட கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

மாவட்ட கனிமவள நிதியிலிருந்து திருப்பூர் மாவட்டம், புக்கலம், அரசு உயர்நிலைப் பள்ளிக்கு ரூ.55 லட்சம் மதிப்பீட்டில் 3 வகுப்பறைக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் ஊரப்பாக்கத்தில் ரூ.63 லட்சத்து 27 ஆயிரம் மதிப்பீட்டில் கிளை நூலகம், மதுரை அவனியாபுரம் அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் ஆசிரியர் நலநிதியிலிருந்து ரூ. 3 கோடி மதிப்பீட்டில் மதுரை ஆசிரியர் இல்லக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. மொத்தம் ரூ.169 கோடியே 11 லட்சத்து 35 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளது.

2021-22-ஆம் ஆண்டுக்கான பள்ளிக்கல்வித் துறை மானியக் கோரிக்கையில், பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககத்தின் வாயிலாக செயல்படுத்தப்படும் கற்போம் எழுதுவோம் இயக்கத்தின் கீழ் திட்டச் செயல்பாடுகளைச் சிறப்பாகவும், புதுமையாகவும் செயல்படுத்தும் கற்போர் மையங்களை ஊக்கப்படுத்தும்விதமாக, ஒரு மாவட்டத்துக்குத் தலா 3 மையங்கள் வீதம் 38 மாவட்டங்களில் 114 மையங்களைத் தெரிவு செய்து பாராட்டுச் சான்றிதழ் மற்றும் கேடயம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பின்படி, சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய 3 மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 3 கற்போர் மையங்களுக்கு மாநில எழுத்தறிவு விருதுகளை தலைமைச் செயலகத்தில் முதல்வர் வழங்கினார்.

நிகழ்ச்சியில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் காகர்லா உஷா, பள்ளிக் கல்வி ஆணையர் க. நந்தகுமார், பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குநர் முனைவர் பெ. குப்புசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

திருக்கோயில் குத்தகைதாரர்களுக்கு இணைய வழி ரசீது

சென்னை, நவ.3: திருக்கோயில்களின் வாடகைதாரர்கள் மற்றும் குத்தகைதாரர்களுக்கு இணைய வழியில் ரசீது வழங்கும் முறை புதன்கிழமை முதல் அமலுக்கு வந்தது.

கடந்த காலங்களில் ஒவ்வொரு திருக்கோயில்களிலும் வாடகைதாரர்கள் மற்றும் குத்தகைதாரர்களுக்கு கேட்பு வசூல் ரசீது பல்வேறு நிலைகளில் வழங்கப்பட்டு வந்தது. அதை தமிழகம் முழுவதும் உள்ள திருக்கோயில்களில் ஒரே சீராக வழங்க வேண்டும் என ஆணையரால் சுற்றறிக்கை அனுப்பட்டது.

இதற்காக ஒருங்கிணைந்த கோயில் மேலாண்மை திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கோயில் வலைதளத்தின் மூலமாகவும், கோயிலில் உள்ள கவுண்டரிலும் கணினி வழி கட்டணச் சீட்டு வழங்க தேவையான மென்பொருள், நிக் (என்ஐசி) என்ற நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்டு தயார் நிலையில் இருந்தது.

அதனடிப்படையில் பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திண்டுக்கல் மாவட்டம், அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில் உள்பட பல்வேறு திருக்கோயில்களில் வாடகைதாரர்களுக்கு புதன்கிழமை கணினி வாயிலாக வாடகை ரசீது வழங்கப்பட்டது. வரும் நாள்களில் இந்த நடைமுறை தொடரும் என இந்து சமய அறநிலையத்துறை தெரிவித்துள்ளது.

ஒத்திவைக்கப்பட்ட பாலிடெக்னிக் விரிவுரையாளர் தேர்வு டிச.8-இல் தொடங்கும்

அமைச்சர் க.பொன்முடி

சென்னை, நவ.3: ஒத்திவைக்கப்பட்ட பாலிடெக்னிக் விரிவுரையாளர் தேர்வு, டிச.8-ஆம் தேதி தொடங்கி நடைபெறும் என உயர்கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி தெரிவித்துள்ளார்.

சென்னை, தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களிடம் அவர் புதன்கிழமை கூறியதாவது: 1060 பாலிடெக்னிக் கல்லூரி விரிவுரையாளர்கள் பணியிடங்களுக்கு, ஒரு லட்சத்து 38,140 பேர் விண்ணப்பித்துள்ளனர். தொழில்நுட்பக் கல்வி விரிவுரையாளர்களுக்கான தேர்வு மையங்கள் வெகு தூரத்தில் உள்ள காரணத்தினால் தேர்வு ஒத்திவைக்கப்பட்டது. இந்தத் தேர்வானது ஏற்கெனவே 120 மையங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், தற்போது 200 மையங்களில் தேர்வு எழுதுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அவற்றின் மூலம் 100 கி.மீ.,-க்குள் உள்ள மையங்களில் தேர்வர்கள் தேர்வு எழுத முடியும். டிச.8-ஆம் தேதி முதல் தேர்வு நடத்தப்படும். எனவே தேர்வு நடக்குமா? நடக்காதா? என தேர்வர்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

10.5 சதவீத இட ஒதுக்கீடு தொடர்பாக தமிழக அரசு மேல்முறையீடு செய்யும். நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பை பல்கலைக்கழகங்களில் அமல்படுத்துவோம்.

7.5 சதவீத இடஒதுக்கீட்டில் பொறியியல் சேர்க்கை பெற்ற அரசுப் பள்ளி மாணவர்களின் கல்வி விடுதி கட்டணத்தை அரசே ஏற்கும் என்ற அறிவிப்புக்கான அரசாணை விரைவில் வெளியிடப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

பஞ்சமி நிலத்தை மீட்க விரைவில் சட்டம்: பட்டியலின ஆணைய துணைத் தலைவர் தகவல்

சென்னை, நவ.3: தமிழகத்தில், பஞ்சமி நிலங்களை மீட்க விரைவில் சட்டம் இயற்றப்படும் என முதல்வர் உறுதியளித்திருப்பதாக பட்டியலினத்தவர்களுக்கான தேசிய ஆணையத் துணைத் தலைவர் அருண் ஹல்தர் தெரிவித்தார்.

இது தொடர்பாக சென்னையில் செய்தியாளர்களிடம் புதன்கிழமை அவர் கூறியதாவது: கடந்த 3 நாள்களாக காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் உள்ளிட்ட இடங்களில் ஆய்வு செய்தோம். தொடர்ந்து, தலைமைச் செயலாளர், துறைசார்ந்த அதிகாரிகள் மற்றும் காவல்துறைத் தலைவருடன் ஆலோசனை நடத்திய நிலையில், முதல்வர் மு.க.ஸ்டாலின், ஆளுநர் ஆர்.என்.ரவி ஆகியோரையும் சந்தித்து பேசினேன்.

அப்போது, தமிழகத்தில் பட்டியலினத்தவர்களுக்காக ஒதுக்கப்பட்ட பஞ்சமி நிலத்தை உரியவர்களிடம் திருப்பி ஒப்படைக்க நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தினேன். உரிய நடவடிக்கை எடுப்பதாக அவர்களும் உறுதி அளித்தனர்.

குறிப்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின், பஞ்சமி நிலத்தை மீட்பதற்கான சட்டம் விரைவில் கொண்டு வரப்பட்டு, அந்த நிலங்கள் அனைத்தும் மீட்கப்படும் என உறுதி அளித்துள்ளார்.

தமிழகத்தில் சுமார் 2 லட்சம் ஏக்கர் பஞ்சமி நிலம் உள்ளது. அதில் சுமார் 40,000 ஏக்கர் பஞ்சமி நிலத்தை வேற்றுப் பிரிவினர் அல்லது தனியார் நிறுவனங்கள் சட்ட விரோதமாக பயன்படுத்தி வருகின்றனர்.

மேலும், வன்கொடுமையால் உயிரிழந்தவர்கள் குடும்பத்தினருக்கு ரூ.8.25 லட்சம் இழப்பீடு, அரசு வேலை, 3 ஏக்கர் விவசாய நிலம் போன்றவை வழங்கப்பட வேண்டும் எனவும் தமிழகத்தில் பட்டியலின வகுப்பினருக்கு ஒதுக்கப்பட்டு நிரப்பப்படாமல் உள்ள 3,000 அரசுப் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும் எனவும் வலியுறுத்தினேன் என்றார் அவர்.

தமிழகத்தில் புதிதாக 962 பேருக்கு கரோனா பாதிப்பு

சென்னை, நவ.3: தமிழகத்தில் தொடர்ந்து மூன்றாவது நாளாக கரோனா பாதிப்பு 1,000-க்கும் கீழ் குறைந்துள்ளது. அதன்படி, புதன்கிழமை புதிதாக 962 பேருக்கு கரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

மாநிலத்தில் இதுவரை 5.15 கோடிக்கும் மேற்பட்ட பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதில் 27 லட்சத்து 5,548 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

புதன்கிழமை வெளியான பரிசோதனை முடிவுகளில் அதிகபட்சமாக கோவையில் 109 பேருக்கும், சென்னையில் 105 பேருக்கும், செங்கல்பட்டில் 82 பேருக்கும் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

இதனிடையே, மேலும் 1,078 பேர் கரோனாவிலிருந்து விடுபட்டு வீடு திரும்பியுள்ளனர்.

இதன் மூலம் இதுவரை குணமடைந்தோரின் எண்ணிக்கை 26 லட்சத்து 58,360-ஆக அதிகரித்துள்ளது.

மருத்துவமனைகளிலும், வீடுகளிலும் தற்போது மருத்துவக் கண்காணிப்பில் 11,012 பேர் உள்ளதாக சுகாதாரத் துறைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழகத்தில்கரோனாபாதிப்புக்குள்ளாகி மேலும் 19 பேர் பலியாகியதை அடுத்து நோய்த் தொற்றால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 36,176-ஆக அதிகரித்துள்ளது.

என்எல்சி சுரங்கங்களில் மழை நீர் தேக்கம்: நிலக்கரி வெட்டியெடுக்கும் பணி நிறுத்தம்

நெய்வேலி, நவ.3: கடலூர் மாவட்டத்தில் பெய்து வரும் பலத்த மழை காரணமாக, நெய்வேலி என்எல்சி சுரங்கங்களில் தண்ணீர் தேங்கியது. இதனால், பழுப்பு நிலக்கரி வெட்டியெடுக்கும் பணி செவ்வாய்க்கிழமை இரவு நிறுத்தப்பட்டது.

நெய்வேலியில் என்எல்சி இந்தியா நிறுவனம் இயங்கி வருகிறது. இங்குள்ள 3 திறந்தவெளிச் சுரங்கங்களிலிருந்து நாள் ஒன்றுக்கு சுமார் ஒரு லட்சம் டன் பழுப்பு நிலக்கரி வெட்டியெடுக்கப்படுகிறது.

இதைப் பயன்படுத்தி 3,390 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட 4 அனல் மின் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், கடந்த சில நாள்களாக கடலூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பலத்த மழை பெய்து வருகிறது. செவ்வாய்க்கிழமை இரவு பெய்த பலத்த மழையால் என்எல்சி நிலக்கரிச் சுரங்கங்களில் தண்ணீர் தேங்கியது. இதனால், நிலக்கரி வெட்டியெடுக்கும் பணி நிறுத்தப்பட்டது.

இதுகுறித்து என்எல்சி அதிகாரிகள் கூறியதாவது: பலத்த மழை காரணமாக பழுப்பு நிலக்கரி வெட்டியெடுக்கும் பணி செவ்வாய்க்கிழமை இரவு நிறுத்தப்பட்டது. புதன்கிழமை காலை 10 மணி முதல் மேல் மண்ணை நீக்கும் பணி நடைபெற்றது. அதன் பின்னரே பழுப்பு நிலக்கரி வெட்டியெடுக்கும் பணி தொடங்கியது. எனினும், தேவையான நிலக்கரி கையிருப்பில் உள்ளதால், மின் உற்பத்தியில் எந்தவிதப் பாதிப்பும் ஏற்படவில்லை என்றனர் அவர்கள்.

நவ.6-இல் பள்ளிகளுக்கு விடுமுறை

சென்னை, நவ.3: தமிழகத்தில் நவ.6-ஆம் தேதி அனைத்துப் பள்ளிகளுக்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பள்ளிக் கல்வி ஆணையர் அனுப்பிய சுற்றறிக்கையின் விவரம்: தீபாவளியையொட்டி, நவ.5-ஆம் தேதி தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு உள்ளூர் விடுமுறை அளித்து தமிழக அரசு உத்தரவிட்டது.

தற்போது பல்வேறு ஆசிரியர் சங்கங்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில் நவ.6-ஆம் தேதி (சனிக்கிழமை) அனைத்து பள்ளிகளுக்கும் விடுமுறை வழங்கி ஆணையிடப்படுகிறது என அதில் கூறப்பட்டுள்ளது.

ஸ்டெர்லிங் பயோடெக் லிமிடெட், இயங்கிவரும் நிறுவனம் எனும் அடிப்படையில் ஒட்டுமொத்தமாக (நொடித்த நிலையில்) அதன் E-ஏலத்திற்கு EOI சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் நீட்டிப்பு

இந்த நாளிதழில் 21.10.2021 அன்று வெளியிடப்பட்ட ஸ்டெர்லிங் பயோடெக் லிமிடெட், இயங்கிவரும் நிறுவனம் எனும் அடிப்படையில் ஒட்டுமொத்தமாக (நொடித்த நிலையில்) அதன் E-ஏலத்திற்கான பொது அறிவிப்பினைத் தொடர்ந்து, இதன்மூலம் அறிவிப்பதாவது; விருப்பம் தெரிவிக்கும் விண்ணப்பத்தினை (EOI) சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் 15.11.2021 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. ஆவணத்தைப் பரிசீலிப்பது தொடர்பான பிற தேதி விவரங்களும் அதன்படி நீட்டிக்கப்பட்டுள்ளன / மாற்றியமைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான முழுவிவரங்களுக்கு கடன்பெற்ற நிறுவனத்தின் இணையதளத்தில் **(http://www.sterlingbiotech.in/liquidation.html)** ஏற்றப்பட்டுள்ள 03.11.2021 தேதியிட்ட நடைமுறை ஆவணம் பதிப்பு 2.1 பார்க்கவும்.

ஸ்டெர்லிங் பயோடெக் லிமிடெட் -க்காக (நொடித்த நிலையில்)
ஒம்/-
Dr. (h.c.) CS Adv மம்தா பினானி
(கலைப்பு அலுவலர்)
பதிவு எண்: IBBI/IPA-002/IP-N00086/2017-18/10227
liquidatorsterlingbiotech@gmail.com (செயல்முறை குறிப்பிட்டது)
mamtabinani@gmail.com (IBBIயில் பதிவுசெய்யப்பட்டது)
தொ.பே.: +91 9831099551
IBBIயில் பதிவுசெய்யப்பட்டகலைப்பு அலுவலர் முகவரி:
2வது தளம், நிக்கோ ஹவுஸ், 2 ஹரே தெரு, கொல்கத்தா-700001, மேற்கு வங்கம்
தேதி: 03.11.2021

சேலம் ஈரோடு இன்வெஸ்ட்மென்டஸ் லிமிடெட்
(CIN) : L31200TN1931PLC145816
பதிவு அலுவலகம் : எண். 61/A8 (38/A8), VJP பாரிஜாதம் அபார்ட்மென்ட்ஸ், 1வது அவென்யூ, அசோக் நகர், சென்னை, தமிழ்நாடு - 600083
பெருநிறுவன அலுவலகம் : V.K.K. பில்டிங், பிரதான சாலை, இரிஞ்சாலகுடா, திருச்சூர் மாவட்டம், கேரளா - 680121 தொலைபேசி எண் : 0480 2828071
மின்னஞ்சல் : salemerodeinvestmentsltd@gmail.com மற்றும் cs@salemerode.com
வலைதளம் : www.salemerode.com

அறிவிப்பு

இதன் மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில், செபி (கடமைகளை பட்டியலிடல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்தல்) ஒழுங்காற்றுமுறை 2015 ன் ஒழுங்குமுறைகள் 29 - உடன் படிக்க - 33 மற்றும் 47 க்கிணங்க, நிறுவனத்தின் இயக்குனர்கள் குழும வேது குழுத கூட்டமானது 2021 நவம்பர் 11 ம் தேதி - வியாழக்கிழமையன்று காலை 11.00 மணிக்கு (இந்திய நேரப்படி), 2021 செப்டம்பர் 30 ம் தேதியுடன் முடிவுறும் காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான நிதி நிலை அறிக்கைகளை பரிசீலித்து அங்கீகரிப்பதற்காகவும், இதர இனங்கள் இருப்பின் கூட்ட தலைவரின் அனுமதியுடன் பரிசீலிக்கவும், காணொலி காட்சி மூலம் நிறுவனத்தின் பெருநிறுவன அலுவலக முகவரியான V.K.K. பில்டிங், பிரதான சாலை, இரிஞ்சாலகுடா, திருச்சூர் மாவட்டம், கேரளா - 680121 ல் நடப்பதாக கருதி நடத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை, நிறுவனத்தின் பங்குகள் பட்டியலிடப்பட்டுள்ள பங்கு பரிவர்த்தனைக்கான BSE லிமிடெட் (www.bseindia.com) மற்றும் நிறுவனத்தின் வலைதளம் (www.salemerode.com) ஆகியவற்றிலும் கிடைக்கப்பெறலாம்.

சேலம் ஈரோடு இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிடெட்-ன் இயக்குனர் குழும ஆணையின் பேரில், ஒப்பம்/- மனிஷா N. மேனன், நிறுவன செயலர், உறுப்பினர் எண். A33083

இரிஞ்சாலகுடா
2021 நவம்பர் 04 ம் தேதி

பங்குதாரர்களுக்கான முக்கிய வேண்டுகோள் :

1 பின்வருவனவற்றில் உள்ள தங்களது மின்னஞ்சல் முகவரி, அலைபேசி எண் மற்றும் வங்கி கணக்கு விபரங்களை புதுப்பித்துக்கொள்ளவும்.
a) நிறுவனம், DP மற்றும் R&T முகவர் அல்லது
b) salemerodeinvestmentsltd@gmail.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும்.
2 தங்களது காகித வடிவிலான பங்குகளை மதிப்பு மாற்றம் (Dematerialise) செய்யவில்லையெனில் செய்து கொள்ளவும்.
3 R&T முகவரிடம் தங்களது சமீபத்திய தகவல் தொடர்பு முகவரியை புதுப்பித்துக்கொள்ளவும்.

SBFC ஃபைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்
(முன்னதாக ஸ்மால் பிசினஸ் ஃபின்கிரெடிட் இந்தியா பிரைவேட் லிமிடெட் என அறியப்பட்டது)
பதிவு அலுவலகம்:- யூனிட் எண்.103, முதல் தளம், C & B சதுக்கம், சங்கம் காம்ப்ளக்ஸ், சாகலா கிராமம், அந்தேரி-குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு), மும்பை-400059.

சுவாதீன அறிவிப்பு [2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 8(2)-ன் படி]

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் படி, கீழே கையொப்பமிட்டுள்ளவர், SBFC ஃபைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்-ன் அதிகாரபூர்வ அலுவலராக இருக்கிறபடியால், மேற்படி சட்டம் பிரிவு 13(12)-ன் கீழும், அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 8-ன் கீழும் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள் / கூட்டுக் கடன்தாரர்கள் அவர்களுக்கு கோரிக்கை அறிவிப்புகளை (DEMAND NOTICES) அனுப்பி அந்த அறிவிப்புகள் பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை செலுத்துமாறு கோரியிருந்தார்.

ஆனால், கடன்தாரர்கள் / கூட்டுக்-கடன்தாரர்கள் மேற்படி பாக்கித் தொகையை முழுவதும் செலுத்தத் தவறிவிட்டதால், கடன்தாரர்கள் / கூட்டுக் கடன்தாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், மேற்படி சட்டம் பிரிவு 13 உட்பிரிவு (4) மற்றும் அதற்குத் தொடர்புடைய மேற்படி விதிகள் 8-ன் கீழ் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துகளை கீழ்க்காணும் தேதிகளில் அதிகாரபூர்வ அலுவலர் தமது சுவாதீனத்தில் (POSSESSION) எடுத்துக்கொண்டுள்ளார்.

எனவே, கடன்தாரர்கள் / கூட்டுக் கடன்தாரர்கள் மற்றும் முக்கியமாக பொதுமக்களுக்கு இதன்மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில், சொத்து விஷயத்தில் எவரும் எவ்வித பேரமோ, நடவடிக்கையோ வைத்துக் கொள்ளக் கூடாது. மீறி வைத்துக் கொண்டால் அது SBFC ஃபைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்-க்குச் செலுத்தவேண்டியுள்ள தொகைக்கு கட்டுப்பட்டதாகும்.

கடன்தாரர்கள் பெயர் மற்றும் முகவரி & கோரிக்கை அறிவிப்பு தேதி	சொத்துகள் விவரம் & சுவாதீன தேதி	சுவாதீன அறிவிப்பு படி கோரப்பட்ட தொகை (ரூ.)
1) விவேகானந்தா வித்யாலயா மெட்ரிகுலேஷன் பள்ளி, துரைபாபு நகர், மதுராந்தகம், பவர் ஸ்டேஷன் ரோடு காஞ்சிபுரம், தமிழ்நாடு - 603306, 2. ஆர். மங்கையர்கரசி & 3.கே. துரை பாபு லோகராஜ், வரிசை எண்.1 & 2, முகவரி: பிளாக் எண். F, ஃ பிளாட் F,103, காமராஜர் தெரு, பொன்னியம்மன் நகர், அயனம்பாக்கம், சென்னை, தமிழ்நாடு-600095 கோரிக்கை அறிவிப்பு தேதி: 30-ஜூன்-2021	சொத்தும் அதன் அனைத்து முக்கிய பகுதிகளும், பழைய S.No.504/1B/2, புதிய.S.No.15/13, நிலத்தின் பரப்பளவு 40 சென்ட் அமைவிடம்: மதுராந்தகம் கிராமம், காஞ்சிபுரம் மாவட்டம், பவர் ஸ்டேஷன் ரோடு, துரைபாபு நகர், மதுராந்தகம். தமிழ்நாடு-603306. எல்லைகள் : வடக்கு - வேலு நாயக்கர் நிலம், தெற்கு-வேலு நாயக்கர் நிலம், கிழக்கு - பழனிக்கு சொந்தமான நிலம், மேற்கு- சாலை. சுவாதீனத்தில் எடுத்த தேதி: 27-அக்டோபர்-2021	ரூ.11682605/- (ரூபாய் ஒரு கோடியே பதினாறு லட்சத்து எண்பத்திரண்டாயிரத்து அறுநூற்று ஐந்து மட்டும்) 30 ஜூன் 2021 அன்றுள்ளபடி

கடனுக்கு ஈடான சொத்துகளை மீட்பது தொடர்பான கால அவகாசம் தொடர்பான மேற்படி சட்டம் பிரிவு 13, உட்பிரிவு (8)-ன் ஷரத்துகளை கவனத்தில் கொள்ளுமாறு கடன்தாரர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இடம்: சென்னை
தேதி: 04.11.2021

ஒம்/- (அதிகாரபூர்வ அலுவலர்)
SBFC ஃபைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்.

அடையாள சுவாதீன அறிவிப்பு

ICICI Bank கிளை அலுவலகம்: ICICI பேங்க் லிட், 4/10, மைத்ரீ டவர், பொம்மனஹள்ளி ஒசூர் பிரதான சாலை, பெங்களூரு - 560068

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின்படி கீழே கையொப்பமிட்டுள்ளவர், ICICI பேங்க் லிமிடெட்டெ-ன் அதிகாரபூர்வ அலுவலராக இருக்கிறபடியால், மேற்படி சட்டம் பிரிவு 13(12)-ன் கீழும், அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்க விதிகள் 3-ன் கீழும், தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழ்க்காணும் கடன்தாரர்களுக்கு கோரிக்கை அறிவிப்பினை (DEMAND NOTICE) அனுப்பி அந்த அறிவிப்பு கிடைத்த 60 நாட்களுக்குள் அதில் காணும் கடன் பாக்கியைச் செலுத்துமாறு கோரப்பட்டது.

ஆனால், கடன்தாரர்கள் மேற்படி பாக்கித் தொகையை முழுவதும் செலுத்தத் தவறிவிட்டதால், கடன்தாரர்களுக்கும், பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், மேற்படி சட்டம் 13(4) மற்றும் அதற்குத் தொடர்புடைய மேற்படி விதி 8-ன் கீழ் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துகளை கீழ்க்காணும் தேதியில் வங்கியின் அதிகாரபூர்வ அலுவலர் தமது அடையாள சுவாதீனத்தில் (Symbolic Possession) எடுத்துக் கொண்டுள்ளார். கடன்தாரர்களுக்கும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில், கீழ்வரும் அடமான சொத்து விஷயத்தில் எவரும் எவ்வித பேரமோ,நடவடிக்கையோ வைத்துக் கொள்ளக் கூடாது. மீறி வைத்துக் கொண்டால் அது ICICI பேங்க் லிமிடெட்-க்குச் செலுத்த வேண்டியுள்ள கடன் பாக்கிக்குக் கட்டுப்பட்டதாகும்.

வ. எண்.	கடன்தாரர் பெயர் / கடன் கணக்கு எண்	சொத்து விவரம் & அடையாள சுவாதீன தேதி	கோரிக்கை அறிவிப்புத் தேதி & கோரிக்கை அறிவிப்பின் படி தொகை ரூ.	கிளையின் பெயர்
1.	V விபின், விஜயன் பாபு வித்யாதரன், ரேமாதேவி P & மீரா கோபி 1655/1 Lic பட்டம் லேன் சர்வே எண். 1655/1 கவுடியார் கிராமம் திருவனந்தபுரம் தாலுக்கா திருவனந்தபுரம்- 695004/ LBCHE00004651288.	மாவட்டம்: திருவனந்தபுரம் தாலுக்கா: திருவனந்தபுரம் துணை மாவட்டம்: பட்டம் ஃபிர்கா: வாஞ்சியூர் கிராமம்: கவுடியார் பகுதி: பாண்டரவக முறி: குருங்கனூர் பஞ்சாயத்து: திருவனந்தபுரம் சர்வே எண்: 1655/1 பரப்பளவு: 5.192 சென்ட் (பரப்பளவு 2 அரஸ் 10.3 சதுர மீட்டர். எல்லைகள்: பறையன்கொல்லிக்குக்கு மேற்கு, பறையன்கொல்லிக்கு கிழக்கு, நடவரம்பினுக்கு வடக்கு, பன்யாரவிளக்குக்கு தெற்கு, சொத்து A துண்டு விவரம்: 5.192 சென்ட் (2 அரஸ் 10.3 சதுர மீட்டர்) சர்வே எண் 1655/1 (மறு சர்வே எண்) கவுடியார் கிராமம், திருவனந்தபுரம் தாலுக்கா: திருவனந்தபுரம் மாவட்டம். அளவுகள்: வடக்கு, கிழக்கு மேற்காக: 10.40 மீட்டர், கிழக்கு :(வடக்கு -தெற்கு) 21.20 மீட்டர், தெற்கு, கிழக்கு மேற்காக: 10.40 மீட்டர், மேற்கு:(வடக்கு-தெற்கு) 19.20 மீட்டர் மற்றும் அங்குள்ள சொத்து அடையாள சுவாதீனத்தில் எடுத்த தேதி: 02 நவம்பர் 2021.	23.03.2021 ரூ. 63,43,456/-	சென்னை

எனவே, முக்கியமாக கடன்தாரர்களுக்கும், ஜாமீன்தாரர்களுக்கும் மேற்படி கடன் பாக்கியை செலுத்துமாறு 30 நாள் அறிவிப்பு இதன் மூலம் அளிக்கப்படுகிறது. இல்லாவிட்டால், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 8 & 9-ன் கீழும் வரும் ஷரத்துகள்படி இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்கள் முடிந்த பின் மேற்படி அடமான சொத்துக்கள் விற்கப்படும்.

தேதி: 03 நவம்பர் 2021
இடம்: சென்னை

அதிகாரபூர்வ அலுவலர்
ICICI பேங்க் லிமிடெட்

இண்டியன் பேங்க் இந்தியன் வங்கி ALLAHABAD அலஹாபாத்
மணலி நியூ டவுன் கிளை
எண்.5, வங்கி தெரு, மணலி நியூ டவுன், சென்னை - 600 103. தொலைபேசி : 044-2593 1243. மின்னஞ்சல் : manalinewtown@indianbank.co.in

சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்துக்களுக்கு)

கீழே கையொப்பமிட்டுள்ள இந்தியன் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-ன் கீழும், மேற்சொன்ன சட்டத்தின் 13(12) வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) சட்டம் 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க விதி 8 மற்றும் 9-க்கு ஏற்ப கீழ்க்கண்ட கடன்தாரர்களுக்கு கீழ்காணும் தேதியிட்ட கோரிக்கை அறிவிப்புகள் அனுப்பி அதில் குறிப்பிட்டுள்ளபடி செலுத்த வேண்டிய தொகை அத்துடன் வட்டியுடன் திரும்ப செலுத்தும் தேதி வரை சேர்த்து மேற்சொன்ன நோட்டீஸ் கிடைத்த 60 நாட்களுக்குள் தொகையை செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார்.

01.11.2021 தேதிப்படி கீழே குறிப்பிட்டுள்ள நிலுவைத் தொகையுடன் மேலும் மேலதிக வட்டி, செலவுகள் மற்றும் பிற கட்டணங்களும் சேர்த்து செலுத்த வேண்டும்

சம்பந்தப்பட்ட கடன்தாரர்(கள்)/ஜாமீன்தாரர்(கள்)/அடமானதாரர்(கள்) மேற்சொன்ன தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர்(கள்)/ஜாமீன்தாரர்(கள்)/அடமானதாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாக அறிவிக்கப்படுவது என்னவெனில் குறிப்பாக உரிய பத்தியில் கொடுக்கப்பட்டுள்ள சுவாதீன அறிவிப்பின்படி கீழ்கண்ட சொத்துக்களை மேற்சொன்ன சட்டத்தின் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சொன்ன விதிமுறைகளின் விதிகள் 8 மற்றும் 9-க்கு இணங்கவும், **02 நவம்பர், 2021** அன்று கீழே கையொப்பமிட்டுள்ள இந்தியன் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி சுவாதீனம் எடுத்துக் கொண்டுள்ளார்.

கடன்தாரர்(கள்)/ஜாமீன்தாரர்(கள்)/அடமானதாரர்(களு)க்கு குறிப்பாகவும் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனம் எடுத்துக்கொண்ட கீழ்கண்ட சொத்துக்கள் இந்தியன் வங்கிக்கு செலுத்தப்பட வேண்டிய கீழ் குறிப்பிட்டுள்ள தொகை மேலும் மேலதிக வட்டி, செலவுகள் மற்றும் பிற கட்டணங்களுடன் சேர்த்து செலுத்தும் வகையில் பிணையமாக உள்ளது என்பதால், யாரும் இந்த சொத்துக்கள் தொடர்பாக எந்தவித நடவடிக்கைகளும் மற்றும் தொடர்புகளையும் வைத்துக் கொள்ளக் கூடாது அப்படி வைத்துக்கொண்டால் அது இந்தியன் வங்கிக்கு செலுத்தவேண்டிய பிணைய தொகைக்கு உட்பட்டது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

"SARFAESI சட்டம் பிரிவு 13(8) ஷரத்துகளின் கீழ் அமைக்கப்பட்ட விதிகளின்படி சொத்துக்களை மீட்டுக்கொள்ள உங்களுக்கு உள்ள உரிமையை கவனத்தில் கொள்ளவும்".

அ **கடன்தாரர்கள் & ஜாமீன்தாரர்கள் பெயர் மற்றும் விலாசம் : (1) M/s.மீனாட்சி அம்மன் எண்டர்பிரைசஸ், (கடன்தாரர்), உரிமையாளர் : K ஜெகந்நாதன்,** எண்.776, B டைப், MMDA, மாத்தூர், சென்னை - 600 068. **(2) திரு.K. ஜெகந்நாதன், (உரிமையாளர் மற்றும் அடமானதாரர்),** த/பெ.லேட் திரு.M. கன்னன், எண்.776, B டைப், MMDA, மாத்தூர், சென்னை - 600 068.

கோரிக்கை அறிவிப்பு தேதி : 12.07.2021. 01.11.2021 தேதி வரை உள்ள மொத்த நிலுவைத்தொகை : ரூ.38,86,720.69/- (ரூபாய் முப்பத்து எட்டு லட்சத்து எண்பத்து ஆறாயிரத்து எழுநூற்று இருபது மற்றும் பைசா அறுபத்து ஒன்பது மட்டும்).

அசையா சொத்துக்களின் விவரங்கள் : அடமான சொத்துக்கள் : மாத்தூர் கிராமம், மாதவரம் தாலுகா, திருவள்ளூர் மாவட்டம், சென்னை மாநகராட்சி எல்லைக்குள் 1280 சதுர அடி பரப்பளவில் உள்ள சர்வே எண்.25 பகுதி & 26 பகுதி கொண்ட நிலம் மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும். தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மேம்பாட்டு திட்டமான மாதவரம் திட்டத்தில் உள்ள 1920 சதுர அடி பரப்பளவு கொண்ட MIG டைப் மனை எண்.595-ன் பிரிக்கப்படாத பங்கு (A-பகுதி) கொண்ட பகுதி. இது சென்னை வடக்கு பதிவு மாவட்டம் மற்றும் திருவொட்டியூர் துணை பதிவு மாவட்டம், சென்னை - 600 019-ல் அமைந்துள்ளது. நிலத்தை சுற்றியுள்ளவை : வடக்கில் : மனை எண்.595 பகுதி & மனை எண்.594, தெற்கில் : மனை எண்.596, கிழக்கில் : மனை எண்.600 மற்றும் 599, மேற்கில் : 40'0" அடி ரோடு. அளவீடு : வடக்கு பக்கம் : 20" அடி, தெற்கு பக்கம் : 20" அடி, கிழக்கு பக்கம் : 32" அடி, மேற்கு பக்கம் : 32" அடி, மொத்தம் 640 சதுர அடி மற்றும் வடக்கு பக்கம் : 40" அடி, தெற்கு பக்கம் : 40" அடி, கிழக்கு பக்கம் : 16" அடி, மேற்கு பக்கம் : 16" அடி, மொத்தம் 640 சதுர அடி. மொத்தம் 1280 சதுர அடி பரப்பளவு கொண்டு திருவொட்டியூர் துணை பதிவு மாவட்டம் மற்றும் சென்னை வடக்கு பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது. சொத்தின் உரிமையாளர் : திரு.K. ஜெகந்நாதன், த/பெ.லேட் திரு.M. கன்னன்.

ஆ **கடன்தாரர்கள் & ஜாமீன்தாரர்கள் பெயர் மற்றும் விலாசம் : (1) டாக்டர்.B.S. தயாநிதி, (கடன்தாரர்),** த/பெ.B. ஸ்ரீனிவாசன், எண்.29, அலெக்ஸ் நகர், 'B' காலனி, மாதவரம் மில்க் காலனி, சென்னை - 600 051. **(2) திரு.B. ஸ்ரீனிவாசன், (இணை-கடன்தாரர் மற்றும் அடமானதாரர்),** த/பெ.லேட் M. பாலகிருஷ்ணன், எண்.29, அலெக்ஸ் நகர், 'B' காலனி, மாதவரம் மில்க் காலனி, சென்னை - 600 051. **(3) திருமதி.வளர்மதி, (ஜாமீன்தாரர்),** க/பெ.B. ஸ்ரீனிவாசன், எண்.29, அலெக்ஸ் நகர், 'B' காலனி, மாதவரம் மில்க் காலனி, சென்னை - 600 051.

கோரிக்கை அறிவிப்பு தேதி : 12.07.2021. 01.11.2021 தேதி வரை உள்ள நிலுவைத்தொகை : ரூ.31,80,619.42/- (ரூபாய் முப்பத்து ஒரு லட்சத்து எண்பதாயிரத்து அறுநூற்று பத்தொன்பது மற்றும் பைசா நாற்பத்து இரண்டு மட்டும்).

அசையா சொத்துக்களின் விவரங்கள் : அடமான சொத்துக்கள் : மாதவரம் கிராமம், மாதவரம் தாலுகா, திருவள்ளூர் மாவட்டத்தில் (முன்னர் சைதாப்பேட்டை தாலுகா, செங்கல்பட்டு மாவட்டம்) உள்ள "அலெக்ஸ் நகர்" (LPDM/DDTP எண்.18/71), என்னும் அங்கீகரிக்கப்பட்ட லேஅவுட் திட்டத்தில் மனை எண்.32 கொண்ட வீடு மற்றும் வளாகம் மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும். சர்வே எண்.987/2-ல் அடங்கியுள்ளது. நிலத்தை சுற்றியுள்ளவை : வடக்கில் : மனை எண்கள்.36 மற்றும் 37, தெற்கில் : 20 அடி ரோடு, கிழக்கில் : பூங்கா, மேற்கில் : மனை எண்.33. அளவீடு : கிழக்கிலிருந்து மேற்காக வடக்கு பக்கத்தில் : 40 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்கு பக்கத்தில் : 40 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்கு பக்கத்தில் : 60 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்கு பக்கத்தில் : 60 அடி. 2400 சதுர அடி பரப்பளவு கொண்டு மாதவரம் துணை பதிவு மாவட்டம் மற்றும் சென்னை வடக்கு பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது. சொத்தின் உரிமையாளர் : திரு.B. ஸ்ரீனிவாசன், த/பெ.லேட் திரு.M. பாலகிருஷ்ணன்.

இ **கடன்தாரர்கள் & ஜாமீன்தாரர்கள் பெயர் மற்றும் விலாசம் : (1) திரு.E JM காலின்ஸ், (கடன்தாரர் மற்றும் அடமானதாரர்),** த/பெ.எசக்கியேல், மனை எண்.9 பகுதி, 1வது குறுக்கு தெரு, ஸ்ரீ பொன்னியம்மன் நகர் விரிவாக்கம், இடையஞ்சாவடி, மணலி நியூ டவுன், சென்னை - 600 103. **(2) திரு.R நந்த குமார், (ஜாமீன்தாரர்),** த/பெ.திரு.S. ராமதாஸ், எண்.4/23, 8வது தெரு, S V M நகர், எண்ணூர், சென்னை - 600 057.

கோரிக்கை அறிவிப்பு தேதி : 07.06.2021. 01.11.2021 தேதி வரை உள்ள நிலுவைத்தொகை : ரூ.16,56,579.75/- (ரூபாய் பதினாறு லட்சத்து ஐம்பத்து ஆறாயிரத்து ஐநூற்று எழுபத்து ஒன்பது மற்றும் பைசா எழுபத்து ஐந்து மட்டும்).

அசையா சொத்துக்களின் விவரங்கள் : அடமான சொத்துக்கள் : மனை எண்.9 பகுதி, ஸ்ரீ பொன்னியம்மன் நகர் விரிவாக்கம், இடையஞ்சாவடி கிராமம், மீஞ்சூர் பஞ்சாயத்து, பொன்னேரி தாலுகா, திருவள்ளூர் மாவட்டம் - 600 103-ல் உள்ள கட்டிடத்துடன் கூடிய நிலம் கொண்ட சொத்து. இது அங்கீகரிக்கப்பட்ட லேஅவுட் எண்.103/91-ல் உள்ள சர்வே எண்.316/2 மற்றும் 6-ல் அடங்கியுள்ளது. இதன் மொத்த பரப்பளவு 1115.5 சதுர அடி. சுற்றியுள்ளவை : வடக்கில் : மனை எண்.9 பகுதி, தெற்கில் : ச. எண்.357-ல் உள்ள நிலம், கிழக்கில் : ச. எண்.317-ல் உள்ள நிலம், மேற்கில் : 24 அடி ரோடு. சொத்தின் உரிமையாளர் : E JM காலின்ஸ், த/பெ.எசக்கியேல்.

தேதி : 02.11.2021
இடம் : சென்னை

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
இந்தியன் வங்கி.